செ.வெ.எண்.75 நாள்: 24.08.2017

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 4 விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.08.2017) நடைபெற்றது.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது: -

விவசாயிகளின் குறைகளை தீர்க்கும் வகையில், தமிழக அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் பருவ மழை இம்மாதம் இயல்பான அளவு கிடைக்கப்பெற்றதால் அணைகளில் ஓரளவு தண்ணீர் இருப்பு உள்ளது. விவசாயிகளுக்கு பயிர் சாகுபடிக்கு தேவையான உரம் மற்றும் விதைகளும் தேவையான அளவு இருப்பில் உள்ளது. கடந்த மாதம் வரை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 482 மனுக்களில் வேளாண்மை சார்ந்த மனுக்கள் 316 மற்றும் வேளாண்மை சாராத 166 மனுக்களுக்கும் பதில்கள் பெறப்பட்டு விவசாயிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளின் வறட்சி பயிர் காப்பீட்டுத் திட்ட நிலுவைத் தொகை குறித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ICICI லம்பார்டு நிறுவன மேலாளர், வேளாண்மை இணை இயக்குநர், கூட்டுறவு துறையினர் இணை பதிவாளர், புள்ளியியல் துறை துணை இயக்குநர் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகளுடன் பாரத பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம் குறித்து 22.08.2017 அன்று ஆய்வு செய்யப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 2016-2017-ம் ஆண்டு இராபி பருவத்தில் நெற்பயிருக்கு பிரிமீயம் செலுத்தி, நாற்றுப்பாவி நடவு செய்ய இயலாமல் போன 6,589 விவசாயிகளுக்கு ரூ.5.33 கோடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 1240 விவசாயிகளுக்கு ரூ.1.20 கோடி செலுத்தப்பட உள்ளது. ICICI லம்பார்டு நிறுவன பிரதிநிதிகளிடம் நேரடியாக நெற்பயிருக்கு காப்பீடு செய்த 2,582 விவசாயிகளுக்கும், நெல் காப்பீடு செய்து மகசூல் இழப்பு ஏற்பட்ட 110 வருவாய் கிராமங்களில் பிரிமீயம் செலுத்திய விவசாயிகளுக்கு தோராயமாக ரூ.4 கோடி தொகையை செப்டம்பர் 10-ம் தேதிக்குள் விவசாயிகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்கள்.

பாரத பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் இழப்பீட்டு தொகை பெறப்பட்ட பயனாளிகளின் பட்டியல், விவசாயிகளின் நேரடி பார்வைக்காக அந்தந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வெளியிட இணையபதிவாளர் கூட்டுறவு துறை அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. நெற்பயிற் தவிர இதர இராபி பயிர்களான மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயிறு, பருத்தி மற்றும் கரும்பு பயிர்களுக்கான மகசூல் விபரம் இயக்குநர், புள்ளியில் துறை மூலம் பெற்ற 45 தினங்களுக்குள் இழப்பீட்டு தொகை உரிய விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இராபி பருவத்தில் பயிர் செய்யப்பட்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ரூ.30.32 கோடி விடுவிக்கப்பட்டு 42,300 விவசாயிகள் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது. இதன் விபரம் திருநெல்வேலி மாவட்ட தேசிய தகவல் மைய வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இது தவிர அந்தந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வெளியிட இணை பதிவாளர் கூட்டுறவுத்துறை அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. இக்கணக்கீட்டில் விடுபட்ட 1733 விவசாயிகளுக்கு ரூ.1.16 கோடி இழப்பீடு வழங்க அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது. பல்லாண்டு பயிர்களான தென்னை, எலுமிச்சை, மா மற்றும் சப்போட்டா பயிரிட்ட 691 விவசாயிகளுக்கு ரூ.0.31 கோடி இழப்பீடு வழங்க அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது.

அரசு அனுமதி பெற்றவுடன், நிவாரண உதவிகள் வழங்கப்படும். விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு பதில்களை வழங்க வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.கனகராஜ், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் திரு.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.கண்ணன், விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.